DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.154/2022 | Deposition of Witness for : PW4 |
| Name : திரு. செல்வராஜ் | Father/Husband Name :பனிப்பிச்சை |
| Age : 56 | Village : |
| Taluk : | Calling : காவல் உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22 July 2026.
Accused A1 to A5 absent. Petition U/s. 317 Cr.P.C filed and allowed.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது சாத்தான்குளம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னால் பணியில் இருந்த சாத்தான்குளம் உதவி ஆய்வாளர் அருள்சாம்ராஜ் என்பவரது கையொப்பம் எனக்கு நன்கு பழக்கம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 17.10.2021 ம் தேதி 17.30 மணிக்கு சாத்தான்குளம் காவல்நிலைய முதல் நிலை காவலர் 1108 முருகன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற செம்மண்குடியிருப்பு கோவில் தெருவைச் சேர்ந்த முத்துராஜா மனைவி சித்திரை பாப்பா என்பவரது காயத் தகவலை பெற்று சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த சித்திரை பாப்பா என்பவரிடம் நடந்த சம்பவத்தை கேட்டு 17.45 மணிமுதல் 18.45 மணிவரை வாக்குமூலம் பதிவு செய்தார். அப்பால் 19.00 மணிக்கு நிலையம் வந்து புகார்வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப சாத்தான்குளம் நிலைய குற்ற எண். 269/2021, U/s.147, 294(b), 323, 324, 506(2) IPC & 4 of TNPHW Act ஆக வழக்கு பதிவு செய்தார். பின்னர் வாதியின் அசல் புகாரர் வாக்குமூலத்தையும், அசல் முதல் தகவல் அறிக்கையையும் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர், சாத்தான்குளம் அவர்களுக்கு அனுப்பியும், மற்றொரு நகலை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக சாத்தான்குளம் உதவி ஆய்வாளர் திரு. அருள்சாம் ராஜ் என்பவர் அவரது பார்வைக்கு வைத்தார். கடந்த 17.10.2021 ம் தேதி இரவு சுமார் 20.00 மணியளவில் சாத்தான்குளம் உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண். 269/2021 U/s.147, 294(b), 323, 324, 506(2) IPC & 4 of TNPHW Act வழக்கு சம்பவ இடமான செம்மண்குடியிருப்பு சென்று சாட்சிகள் ராஜதுரை, சிவபெருமாள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பின்னர் சித்திரை பாப்பாவை மருத்துவமனையில் விசாரணை செய்ததில் அறிவேன் சாட்சியாக கையொப்பமிட்ட முத்துராஜா என்பவரையும் விசாரணை செய்தும் அப்பால் சாட்சிகள் சிவகுமார், முத்துகுமார், ராஜன்

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.22 19:40:24 +0530

ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றும், பின் வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச்சான்றிதழ் கிடைக்கப் பெற்றார். அப்பால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல்நிலைக் காவலர் திரு.முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரிகள் மாண்புமிகு தூத்துக்குடி மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று சென்றதால் அவர்களை கைது செய்யவில்லை. அவரது சாட்சியத்திலும், சாட்சிகளின் விசாரணையிலும் சம்பவம் அனைத்தும் உண்மையென தெரிந்ததால் எதிரிகள் மீது 20.11.2021 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். **புகார்மனு அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், அ.சா.1 ன் காயச் சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

2. இவ்வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.22 19:40:31 +0530

Judicial Magistrate, Sathankulam.